**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 -ம் நாள் புதன்கிழமை

**O.S. No.46/2025**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராதாகிருஷ்ணன் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | சிவஞானம் | கிராமம் | : | ஆகாசவெளி |
| | | | தொழில் | : | இராணுவம் (ஓய்வு) |
| | | | வயது | : | 78 |

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்து போன ராமச்சந்திரன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அண்ணன் ஆவார். 1ம் பிரதிவாதி எனது அண்ணனின் மனைவி ஆவார். எனது வழக்குரையில் எனது அண்ணன் என்னிடம் ரூ.10000/- கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கினை நான் கொடுத்த கடன் அடிப்படையில் வழக்கு சொத்தில் உரிமை கோருகிறேனா அல்லது உயில் மூலம் உரிமை கோருகிறேனா என்றால் நான் கொடுத்த கடனை திருப்பி கொடுக்க முடியாததாலும் அவருக்கு வாரிசுகள் இல்லை என்பதாலும் உயில் எழுதி கொடுத்துள்ளார் அதன்படி உரிமை கோருகிறேன். நான் முதல் விசாரணையில் எனது அண்ணனை பராமரித்ததன் பேரில் உயில் எழுதி வைத்தார் என்று சொல்லி விட்டு தற்போது கடன் கொடுத்ததால் அதற்காக உயில் எழுதி வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் நான் தான் அவரை பராமரித்து வந்து ஈமச்சடங்குகளையும் நான் தான் செய்து வந்தேன். நான் எழுதி வாங்கிய கடன் பத்திரம் காலாவதியாகிவிட்டதால் தற்சமயம் உயில் எழுதி வைத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் பட்டாவை தனது பெயருக்கு மாற்றம் செய்ய முயற்சித்தார் என்று காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நேரிடையாக தெரிந்துகொண்டேன். நான் எனது வழக்குரையில் 2,3 பிரதிவாதிகளை பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்று சட்டப்படியான கடமைகளை செய்வதை தடுக்க முடியாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.25 19:17:25 +0530

District Munsif -Cum-

Judicial Magistrate,

Kodavasal.